‘கலப்பை மக்கள்’ இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் கழகத்தில் இணைந்தார்.

முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசு பள்ளிக் கூடங்களுக்கு வகுப்பறைகள் – கலைஅரங்கங்களை தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்த மக்கள் சேவகர் “தென் மாவட்டங்களில் சிறந்தகல்வி நன்கொடையாளர்” விருது பெற்ற கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50க்கும் மேற்பட்ட அவ்வியக்கத்தின் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர். அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ், ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்ச்சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன்

பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 12 -

தமிழ்ச்சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியார் பிறந்தநாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

“திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்; தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்”

எனப் பாடிப் பெண்களின் உயர்வை வலியுறுத்திய மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாள்!

நமது திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்ததுமே பாட்டுக்கொரு புலவன் பாரதி மறைவெய்திய நூற்றாண்டினையொட்டி அவரது புகழ் பரப்பும் 14 சிறப்பு அறிவிப்புகளை வெளியிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.

பெண்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் நமது அரசின் திட்டத்துக்குப் பாரதியின் கவிதையில் இருந்தே புதுமைப் பெண் எனப் பெயரிட்டோம்.

பாரதியாரின் நினைவு நாளினை “மகாகவி நாள்” எனக் கடைப்பிடிக்கவும் அறிவிப்பு செய்தோம்.

சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் புதுமையை நோக்கி விரைந்து தமிழ்ச்சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

நெல் கொள்முதலுக்கான ஈரப்பத விதிமுறைகளை

17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக எப்போது தளர்த்தப் போகிறீர்கள்?

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.12 -

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து, விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடந்த மாதம் 11ஆம் தேதி கடிதம் எழுதியதை தொடர்ந்து நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி., நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சருக்கு பல கேள்விகளை எழுப்பினார்.

அதில், குறுவைப் பருவத்திற்கான (Kharif 2025 - 2026) தமிழ்நாட்டின் நெல் கொள்முதல் இலக்கை 16 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து மாற்றி இதே குறுவை பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப அதன் இலக்கை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்து திருத்தம் மேற்கொள்ளத் தயாரா? என கேள்வி எழுப்பினார். மேலும் கொள்முதல் இழப்புகளிலிருந்து தமிழ்நாட்டு நெல் விவசாயிகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

குறுவை பருவத்திற்கான (Kharif 2025 - 2026) தமிழ்நாட்டின் நெல் கொள்முதல் இலக்கை 16 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து மாற்றி இதே குறுவை பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப் படும் மொத்த நெல் அளவிற்கேற்ப அதன் இலக்கை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்து திருத்தம் மேற்கொள்ளத் தயாரா? மேலும் அதற்கான அங்கீகாரத்தின் தற்போதைய நிலை என்ன? ஏதேனும் தாமதம் இருந்தால் அதற்கான காரணங்கள் என்ன?

வடகிழக்குப் பருவமழையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பத விதிமுறைகளை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாகத் தளர்த்தக் கோரி தமிழ்நாடு அரசு விடுத்த கோரிக்கையை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யுமா? மேலும், இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக அனுப்பப்பட்ட ஒன்றிய அரசின் ஈரப்பதம்மதிப்பீட்டுக் குழுக்களின் (moisture assessment teams MAT) பரிந்துரைகளின் தற்போதைய நிலை என்ன, அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்/எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன?

விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போல, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவைத் தளர்த்த வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு மறு பரிசீலனை செய்யுமா?

அவ்வாறு செய்தால், அதன் விவரங்களும், அதற்கு ஒன்றிய அரசின் பதிலும் என்ன?

ஊட்டச்சத்துக் கலக்கப்பட்ட அரிசி (Fortified Rice Kernel FRK) வழங்குவதில், தமிழ்நாடு அரசு கோரியுள்ளபடி, மூட்டை அளவை 25 கிலோவிலிருந்து 50 கிலோவாக அதிகரிக்கவும், மாதிரிப் பிரிவின் (Sample Lot Size) அளவை 10 மெட்ரிக் டன்னிலிருந்து (MT) 25 மெட்ரிக் டன்னாக திருத்தி அமைக்கவும் ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்குமா? அவ்வாறு ஒப்புதல் அளித்தால் அதன் விவரங்கள் என்ன, தற்போதைய நிலுவை நிலை (Status of Pending Approval) என்ன?

கொள்முதல் இழப்புகளிலிருந்து தமிழ்நாட்டு நெல் விவசாயிகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கேள்விகள் எழுப்பினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சிங்கவரம் ஊராட்சியில் ‘என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச் சாவடி’ பரப்புரையை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான நீதிபதியின் தீர்ப்பு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்!

பா.ஜ.க. அரசு மதச்சார்பற்ற கோட்பாட்டை சிதைத்து வருகிறது!

மதுரை கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் பேச்சு!

மதுரை, டிச. 12 -

திருப்பரங்குன்றம் தீப விவகாரம் தொடர்பான நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் தீர்ப்பு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மதச்சார்பற்ற கோட்பாட்டை சிதைத்து வருகிறது என்றும் மதுரையில் நடைபெற்ற கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.



மதுரை பாண்டி கோயில் அருகே உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வழக்கறிஞர் அணிசார்பில் மதச்சார்பின்மை (Secularism) என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு கழகத்தினுடைய உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் ஆற்றிய உரை வருமாறு:-

‘மதச்சார்பின்மை’ என்ற தலைப்பில் எனக்கு முன்னாலே இந்தியக் கூட்டணியைச் சார்ந்த வழக்கறிஞர்கள் இந்த தலைப்பின்கீழ் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்கள். அந்தக் கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கக்கூடிய வகையில், என்னுடைய எண்ணங்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

மதச்சார்பின்மை என்ற அரசியல் கோட்பாட்டை இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையிலேயே (Preamble of the constitution) சேர்த்துள்ளார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் கட்டமைப்புக்கு எத்தகைய கொள்கை கோட்பாடுகள் அடித்தளமாக இருக்க வேண்டும் என்பதை இந்த முன்னுரை தெளிவுப்படுத்துகிறது.

விடுதலை பெற்ற இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமுறை இறையாண்மையை உள்ளடக்கிய சமத்துவ மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்கள். இந்த அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் ஒன்றிய அரசும், மாநிலங்களுடைய அரசுகளும் அமைந்திட வேண்டும். இந்த அரசியல் ஜனநாயகத்தை வரையறுத்தபின் சமூக ஜனநாயகம் எப்படி இருக்க வேண்டுமென தெளிவுபடுத்துகிறார்கள்.

சமூக ஜனநாயகத்தின் சமூகப் பொருளாதார அரசியல் சுதந்திரம் (Liberty) இருக்க வேண்டும். அந்த சுதந்திரம் நியாயத்தின் (Justice) அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பு (Equality) கட்டமைக்கப்பட வேண்டும் எனவும், ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பை உருவாக்கி பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், சமூக உறவுகளின் சகோதரத்தன்மை (Fraternity) தொடர்ந்திட அதற்கான பாதுகாப்பை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஆட்சிமுறையில் ஜனநாயக குடியரசாகவும், சமூக ஜனநாயக சமத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், மதச்சார்பற்ற அரசாக ஆட்சிமுறையை கட்டமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அடிப்படைக் கட்டமைப்புகளை உள்ளடக்கியதே மதச்சார்பற்ற ஆட்சிமுறையாகும். இந்த இந்த ஆட்சிமுறைதான் தற்பொழுது கடும்தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தகைய விபரீத விளைவிற்கு ஒன்றிய பா.ஜ.க அரசின் மதவெறி கோட்பாடும், செயல்திட்டங்களும்தான் காரணம் என்பதை விரிவாக விளக்கத் தேவையில்லை. ஒன்றிய பா.ஜ.க அரசின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கையே “இந்துத்துவா” கோட்பாட்டின் அடிப்படையில் “இந்து ராஷ்டிரத்தை” உருவாக்குவதுதான். “இந்துத்துவா” கோட்பாடு என்பது, வேதங்களின் மறுபதிப்புத்தான். எனவே, “இந்துத்துவா” கோட்பாடு என்பது இந்து சமூகத்தை மீண்டும் சனாதனத்திற்கும் வர்னாசன தர்மத்திற்கும் இட்டுச் செல்லும் வழித்தடம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!!

இந்திய ஒன்றியம் என்பது “ஒரு நாடு” அல்ல. மாறாக, ஒரு துணைக்கண்டம் என்பது தான் வரலாற்று ஆசிரியர்களின் தீர்க்கமான முடிவாகும். இந்தியா பன்முகத் தன்மை கொண்ட பல்வேறு மொழிஇன கலை, கலாச்சார, நாகரிக, பண்பாட்டு வேறுபாடுகளை உள்ளடக்கியது. எனவேதான், ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்ற பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் துணைக்கண்டத்தை ஒரு ஆட்சியில் கொண்டு வருவதற்கான அன்றைய தேசியத் தலைவர்களின் ஒருமித்த முயற்சியின் காரணமாகத்தான், ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது.

ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்ட இந்திய ஒன்றிய ஆட்சி நிரந்தரமாகத் தொடர வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையில்தான் அன்றைய தேசிய தலைவர்கள் மதச்சார்பற்ற கோட்பாட்டை இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளில் ஒன்றாக இணைத்தார்கள். எனவே, மதச்சார்பற்ற கோட்பாட்டை உருக்குழைக்கும் எந்த முயற்சியும் இந்திய நாட்டினுடைய ஒற்றுமையை சிதறடித்து சின்னாபின்னமாக்கிவிடும்.

இந்த அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ள மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு மதச்சார்பற்ற கோட்பாட்டை சிதைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நாசக்கார நடவடிக்கைகளில் ஒன்றுதான் திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றும் பாரதிய ஜனதா கட்சியின் செயல் திட்டமாகும். தமிழ்நாட்டின் சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற சில மாதங்களே உள்ள நிலையில், கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சியை விளம்பரத்தோடு விரைவுப்படுத்துவதற்குக் காரணம் பெரும்பான்மையான இந்து மக்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெறுவதற்காக மட்டும்தான் என்ற அரசியல் ஆதாய உள்ளடக்க நடவடிக்கைதான், பாரதிய ஜனதா கட்சியின் கார்த்திகை தீப விளக்கேற்றும் நடவடிக்கையாகும். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

பாரதிய ஜனதா கட்சியும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் இந்த முயற்சியை மேற்கொள்வது என்பதையும் அவர்களது நோக்கத்தையும் நம்மாலே புரிந்து கொள்ள முடியும். ஆனால், உயர்நீதிமன்றம் தலையிட்டு எதார்த்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், தீர்ப்புகளை வழங்குவதும், மாநில அரசினுடைய பாதுகாப்பு முன்ஏற்பாடுகளை ரத்து செய்வதும், மத்திய தொழில்துறை சார்ந்த காவல் துறையை துணைக்கு அழைப்பதும் விபரீதமான விளைவுகளை உருவாக்கும் என்பதை தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதி இதனை சிந்திக்க மறந்துவிட்டாரா? மறுத்துவிட்டாரா? என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாகும்.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்கள் கடந்த காலத்தில் இந்தப் பிரச்சினை குறித்த உயர் நீதிமன்ற தீர்ப்புகளை முறையாக பரிசீலித்திருக்க வேண்டும். நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பின்படி, சிக்கந்தர் தர்காவிற்கு எதிரேயுள்ள கல் தூணில் விளக்கேற்றுவதற்கான முயற்சிகளில் பா.ஜ.க.வினர் ஈடுபட்ட நிலையில், ஏற்கனவே திருப்பரங்குன்றம் கோயில் நிர்வாகம் தாங்கள் தொடர்ந்து பின்பற்றி வரும் வழக்கப்படி டிசம்பர் மூன்றாம் தேதியே உச்சிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் கார்த்திகை தீபம் ஏற்றிவிட்டார்கள்.

உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்புப்படி, பெரும்பாலும் வெளியூரிலிருந்து வந்த பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் திருப்பரங்குன்றம் மலையடிவாரத்தில் கூடி சிக்கந்தர் தர்காவிற்கு எதிரே உள்ள கல் தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்காக முயற்சி மேற்கொள்வார்களேயானால், அங்கு உருவாகும் பதற்ற நிலைமையும், கலவர சூழ்நிலையையும் மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல்துறை அதிகாரிகளும் கணக்கில் எடுத்துக்கொண்டு சூழ்நிலைகளை ஆழமாக பரிசீலித்து பொது அமைதி காப்பதற்கும், கலவர சூழ்நிலையை தடுப்பதற்கும், 144 சட்டப் பிரிவின்கீழ் தடை உத்தரவு பிரகடனப்படுத்தியதில் என்ன தவறு இருக்க முடியும்?

உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பாக, மதம் சார்ந்த பிரச்சினைகளில் நிதானம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற நடுநிலைச் சிந்தனையோடு 144 தடை உத்தரவு பிறப்பித்தது எல்லா வகையிலும் சரியானதும் தீர்க்கமானதுமாகும். இந்தத் தடை உத்தரவின் காரணமாகத்தான் திருப்பரங்குன்றத்தில் பொது அமைதி பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை திருப்பரங்குன்றத்தில் வாழக்கூடிய அனைத்து தரப்பு மக்களும் பகிரங்கமாகத் தெரிவிக்கிறார்கள். எனவே, இந்த சூழ்நிலையில் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு தான் திருத்தப்பட வேண்டுமேயொழிய, 144 தடை உத்தரவினை எதிர்த்து விமர்சிக்க வேண்டிய காரணங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

இத்தகைய மதம் சார்ந்த நீதிமன்ற தீர்ப்புகளில் மாநில அரசுக்கு பொது அமைதியை கட்டிக்காக்கும் பொறுப்பை அரசியல் சட்டம் வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரும், காவல்துறை அதிகாரிகளும் மிகுந்த பொறுப்புணர்வோடு தங்கள் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதுதான் பொதுமக்களுடைய எண்ணமும், சிந்தனையுமாகும். நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பை விமர்சனம் செய்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஹரி பரந்தாமன், நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பில் சட்ட விதிகள் மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சார்ந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அவருடைய தீர்ப்பு மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்பது அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும். இங்கு குழுமியிருக்கும் இந்தியக் கூட்டணியைச் சார்ந்த வழக்கறிஞர் பெருமக்கள் இந்த எண்ணங்களையும், சிந்தனைகளையும் பொது மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும். மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும். மதவெறியர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற கருத்தை கற்றறிந்த வழக்கறிஞர்களாகிய உங்களது சிந்தனைக்கு நான் சார்ந்துள்ள இயக்கத்தின் சார்பாக முன் வைக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் பேசினார்.